# தொல்காப்பித்தில் கைகோளும் திருக்குறளின் இன்பத்துப்பாலும்

*முனைவர் மு. செல்வகுமார்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய வளனார் கல்லூரி (கலை மற்றும் அறிவியல்)
கோவூர், சென்னை

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6461

**தோற்றுவாய்**

மொழிகளில் தலையாய மொழி எம் செம்மொழி தமிழ்மொழியாம். அத்தகைய மொழியில் மானிடர்களுக்கான வாழ்க்கை நெறியினைப் பற்றிக் கூறுகிறது. அத்தகைய வாழ்க்கையில், மனிதர்களின் காதலை மிகச் சிறந்த பின்னணியாக அமைந்து இருப்பது இயற்கை காட்சியாகும். அந்த வகையில், ஐந்து நிலத்துக் காட்சிகளையும் அழகுபடத் தீட்டி உள்ளனர் சங்கப் புலவர். அவற்றுள், தொல்காப்பியம் என்பது தமிழர்களுக்குக் கிடைத்த முதல் இலக்கண நூலாகும். அது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. இதனுடைய சிறப்பு என்னவென்றால், எந்த மொழியிலும் கூறப்படாத பொருள் இலக்கணம் தொல்காப்பியர் கூறி இருக்கிறார். அது தமிழ் மொழிக்குக் கிடைத்த மிகப் பெரிய செல்வம். அவற்றுள், தமிழர்களின் அக வாழ்க்கைப் பற்றியும் புற வாழ்கைப் பற்றியும் பொருளதிகாரத்தில் ஐந்து இயல்களில் கூறியுள்ளது. தமிழர்கள் அக வாழ்க்கைக்குப் பெரும் மதிப்புக் கொடுத்து வாழ்ந்தனர் என்று தொல்காப்பியத்தின் வழி அறிய முடிகிறது. கைகோள் என்று கூறப்படுவது களவும் கற்பும். அதன் ஒழுக்க முறைகள், நெறிமுறைகள் ஆகியவற்றைக் கொண்டு திருக்குறளில் கூறப்பட்ட இன்பத்துப்பாலில் கூறுப்பட்டுள்ள களவு மற்றும் கற்பு ஒழுக்க நெறியினை எவ்வாறு வள்ளுவர் கையாண்டு மானிடர்களுக்குக் கூறியுள்ளார். அதனை, இன்றைய மக்கள் வாழ்க்கையில் இருந்து எவ்வாறு விலகி நிற்கின்றனர் என்பதையும் அதனால், தமிழர்களின் அக வாழ்வின் மரபுகள் எவ்வாறு இன்று சீரழிந்து வருகின்றது என்பதைப் பற்றியும் அந்தச் சீரழிவைப் போக்க, பண்டைய தமிழர்கள் வாழ்ந்த ஒழுக்க நெறியினைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தால், தமிழர்களின் அக வாழ்வு மேலோங்கி நிற்பதற்கும் நிலைத்துக் காணப்படுவதற்கும் தமிழ் இலக்கியம் மொழிந்த ஒழுக்கத்தைப் பின் பற்றி வாழ்ந்தால், சாலச் சிறந்தது என்று கூறப்படுவதே இந்த ஆய்விற்குக் களமாக அமைந்துள்ளது.

## தொல்காப்பியம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அக வாழ்வின் ஒழுக்க நெறிமுறைகள் குறித்து அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், எனும் நான்கு இயல்களில் கூறப்படுகிறது. கைகோள் என்பது தொல்காப்பியத்தில் கூறப்படும் செய்யுள் உறுப்புகளில் கூறப்படுவதாக அமைந்துள்ளது. கைகோள் என்பது களவு வாழ்க்கையும் கற்பு வாழ்க்கையும் பற்றிக் கூறுவதாக அமைந்தது. மனித வாழ்க்கையில் களவும் கற்பும் இரண்டு கண்கள் என்று கூறினால், அது மிகையாகாது. களவு ஒழுக்கத்தின் வாழ்க்கையினைக் குறித்துக் களவியலில் கூறப்படுகிறது. கற்பியலைப் பற்றிய ஒழுக்க நெறிமுறையினைக் கற்பியலில் கூறப்படுகிறது. இந்த இரண்டு இயலிலும் கூறப்படாத செய்திகளைப் பொருளியலில் கூறப்படுகிறது.

அகத்திணையியலில் அன்பின் ஐந்திணையாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலத்தில் வாழ்ந்த மக்களின் ஒழுக்கம் அதனோடு தொடர்புடைய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், ஆகியவற்றைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது. இரண்டாவது இயலாகிய புறத்திணையியலில் அக வாழ்வினைத் தவிர்த்து, புற வாழ்க்கையில் நிகழும் அனைத்துச் செய்திகளையும் பற்றிக் கூறுவதாக உள்ளது. தமிழர்களின் வாழ்க்கையில் அகமும் புறமும் இரண்டு கண்களாகக் கொண்டு வாழ்ந்தனர்.

## திருக்குறள்

திருக்குறள் என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவான கருத்துகளை உரைக்கப்படுவதால், உலகப் பொதுமறை என்று அறிஞர் பெரு மக்கள் கூறுவர். அதாவது சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றைக் கடந்து பொதுவான கருத்துகளைக் கூறுகிறது. வள்ளுவர் அவற்றை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்று பெறும் பிரிவுகளை உள்ளடக்கி இயற்றியுள்ளார். அவற்றுள், காமத்துப்பாலில் களவு வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்க நெறியும் கற்பு வாழ்க்கைகுத் தேவையான ஒழுக்க நெறியும் கூறப்பட்டுள்ளன. இந்த இரண்டு ஒழுக்க நெறிகளையும் குறித்து 25 அதிகாரத்தில் களவுப் பற்றி ஏழு அதிகாரங்களிலும் (70 குறள்) கற்பினைப் பற்றிப் பதினெட்டு அதிகாரங்களிலும் (180 குறள்) கூறப்படுகிறது.

## கைகோள்

கைகோள் என்பது செய்யுளுக்குரிய ஓர் உறுப்பாகக் கொண்டாலும் அச்செய்யுள் மக்கள் வாழ்வில் தங்களுடைய நெறியில் இருந்து விலகி நிற்காமல் அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காகவே இயற்றப்பட்டது எனலாம். தொல்காப்பியம் செய்யுளுக்குரிய உறுப்புகள் முப்பத்திரண்டு என்று உரைக்கின்றது. அவற்றுள், கைகோள் என்பது பதினேழாவது உறுப்பாக உள்ளது.

கைகோள் என்பது களவு வாழ்க்கையும் கற்பு வாழ்க்கையும் எடுத்துக் கூறுவதாகும். அவை,

**“திணையே கைகோள் பொருள் வகையனாஅ.”**[1]

என்ற நூற்பா பகர்கிறது.

**“மெய்பெறு மவையே கைகோள் வகையே.”**[2]

என வரும் நூற்பா எடுத்துரைக்கின்றது.

பொருள் பெற வந்த களவு வாழ்க்கைப் பற்றியும் கற்பு வாழ்க்கைப் பற்றியும் எடுத்துக் கூறும் இரு வகையின் தன்மையே கைகோள் வகையாகும்.

கைகோள் எனப்படுவது களவும் கற்பும். கற்பாவது திருமணமோடு இயைந்து வருவது. களவாவது திருமணம் இன்றி வருவது. இவைகள் கற்பைக் கொண்டு வருவதோடு களவைக் கொண்டு வருவதே கைகோளாகும்.

## களவும் கற்புக்குரிய நெறிகள்

தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் தமிழர்களின் வாழ்க்கையினைக் குறித்து அகம், புறம் என்று இரண்டாகப் பிரித்துப் பொருளதிகாரத்தின் வாயிலாகக் கூறியுள்ளது.

அக வாழ்வும் புற வாழ்வும் தமிழர்களின் இரண்டு கண்கள் போல, களவும் கற்பும் தமிழர்களின் இரண்டு கண்கள் என்று கூறினால், அது மிகையாகாது. ஒரு மனிதனுக்கு அக வாழ்க்கையில் களவும் கற்பும் மிகவும் இன்றியமையாதாக அமைகிறது. அக வாழ்க்கை என்பது களவில் தொடங்கி கற்பில் முடிய இரண்டும் என்ற நெறிமுறைகள் தமிழர்களின் மரபாகும். இதுவே, அன்பின் ஐந்திணை என்று தமிழர்கள் கூறுவர்.

**களவின் ஒழுக்க நெறி**

களவு ஒழுகக நெறி என்பது பெற்றோர், உற்றார், உறவினர், சுற்றத்தார், ஆகியோருக்குத் தெரியாமல் ஓர் ஆணும் பெண்ணும் மறைந்து ஒழுகி, அவர்கள் மணமக்களாக இணைந்து இல்வாழ்க்கை வாழ்வதற்குக் களவு மனித வாழ்க்கையில் முதன்மையான பங்கு வகுக்கிறது.

ஒத்த தன்மையுள்ள ஒரு தலைவனும் தலைவியும் சந்திக்கும்போது, அவர்களுள் காதல் தோன்றும். வேறு வேறு நிலத்து மக்களாகவும் இருக்கலாம். எனவே, முன் வினைப் பயனாகவும் அவ்விருவரும் ஒன்று கூடுவார்கள். அவர்கள் இருவரும் மனமொன்றிக் காதலித்து இன்பம் துய்ப்பர். அவர்கள் அடிக்கடி இரவிலும் பகலிலும் குறித்த இடத்தில் கூடுவர். அக்களவு ஒழுக்கம் உறவினருக்குத் தெரியாமலும் மேற்கொள்வர். இதனை,

**"ஒன்றே வேறே என்றிரு பால்வாயின்**
**ஒன்றி உயர்ந்த பால தானையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும காண்ப**
**மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே."[3]**

மேலும்,

**"குறியெனப் படுவ திரவிலும் பகலிலும்**
**ஆறியக் கிளந்த இடமென மொழிப."[4]**

மேலும்,

**"குறியெனப் படுவ திரவிலும் பகலிலும்**
**அறியத் தோன்ற மாற்ற தென்ப."[5]**

மேலும்,

**"ஒரு நெறிப் பட்டாங் கோரியல் முடியுங்**
**கரும நிகழ்ச்சி இடமென மொழிப."[6]**

என நூற்பாகள் எடுத்துரைப்பதைக் காணலாம்.

தலைவனும் தலைவியும் ஒன்று கூடி இணைவதற்குத் தொல்காப்பியர் "பால்வரைத் தெய்வம்" எனும் ஊழியின் காரணத்தால், ஓர் இடத்தில் கூடுவர். இவ்விருவரும் ஒன்று பட்டுக் காதல் ஒழுக்கத்தை ஒழுகுவர். இத்தகைய வாழ்க்கை ஒழுக்க நெறியினைக் களவு என்று அகப்பொருள் இலக்கணங்கள் கூறுகின்றன. இந்த ஒழுக்கத்தை இரவிலும் பகலிலும் யாருக்கும் தெரியாமல் ஒழுகுவர் என்பதைக் குறித்து நூற்பாக்களின் வாயிலாக அறிய முடிகின்றது.

இத்தகைய களவு வாழ்க்கையினைக் குறித்துப் பல்வேறு சான்றோர்கள பல வகையான விளக்கங்களைக் கூறுகின்றனர். "களவு நெறியாவது வாழ்நாள் காறும் ஒருயிர் தன் காதல் செல்லுதற்குரிய மறுபாலுயிரைத் தானே தேர்ந்து கொள்ளும் இயற்கை நெறி"[7] என்று வ.சுப.மாணிக்கம் களவிற்கு விளக்கம் கூறியுள்ளார்.

"இன்பமும் பொருளும் அறமென்று கூறிய மூவகைப் பொருள்களுள் ஒருவனோடு ஒருத்தியும் தோன்றிய அன்பொடு கூடிய இன்பத்தின் பகுதியாகிய புணர்தல் முதலிய ஐவகை ஒழுக்கத்தினுள் புணர்தல் நிமித்தமும் எனப்பட்ட காமப் புணர்ச்சியை ஆராயும் காலத்து எண்வகை மணங்கள் கந்தருவர்க்குரிய மண வாழ்க்கையை ஒத்தது."[8] என்று கு.சுந்தர மூர்த்தி என்பவர் விளக்கம் மொழிந்துள்ளார்.

களவு என்பது யாருக்கும் தெரியாமல் களவாடப்பட்ட காதல் எனலாம். இது தலைவனுக்கும் தலைவிக்கும் ஒக்கும். அவர்களுக்கு மட்டும் அல்லாமல் உற்றார், உறவினர்க்குத் தெரியாமலும் களவு செய்தலையும் தலைவன் தலைவிக்குத் தெரியாமல் மனதை களவாடப்படுதலும் தலைவி, தலைவனுக்குத் தெரியாமல் களவு செய்தலும் அது, ஒருவருக்கொருவர் அறியப்பட்ட பின் காதலாக மலரும்.

வ.சுப.மாணிக்கம் கூறிய கருத்து ஒற்றுக் கொள்ளும் நோக்கில் உள்ளது. கு.சுந்தரமூர்த்தி அவர்கள் கூறிய விளக்கம் மறுக்கக் கூடிய வகையில் உள்ளது. ஒரு சாரார் எண்வகை மணங்களுள் கந்தர்வம் மட்டும் தமிழர்களின் மரபு என்றும் கருதுகின்றனர். மற்றொரு சாரார் எண்வகை மணமுறைகள் தமிழர்களுடைய மரபு இல்லை என்றும் கூறுகின்றனர்.

தமிழர்களின் அக வாழ்க்கை நெறி என்பது ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டுத் தம் காதலை யாருக்கும் தெரியாமல் ஒழுகப்பட்டாலும் காலம் செல்ல செல்ல மலர்கள் எப்படி மலர்ந்து அதன் மணத்தை வெளியே வீசுகின்றதோ அதைப் போல, களவு வாழ்க்கையும் வெளிப்படும். இவ்வாறு, வெளிப்படும்போது, அந்த வாழ்க்கை கற்பில் முடிய வேண்டும் என்பதே தமிழர்களின் கைகோள் வாழ்க்கை நெறியாகும்.

எண்வகை மணங்களுள் கந்தர்வம் என்பது தமிழர்களுடைய மரபு என்று கு.சுந்திரமூர்த்தி அவர்கள் கூறிய விளக்கம் மறுக்கக்கூடிய வகையில் உள்ளது. கந்தர்வம் என்பது களவில் தொடங்கி கற்பில் முடிய வேண்டும் என்ற வரையறை இல்லை. ஆனால், தமிழர்களின் நெறி என்பது களவில் தொடங்கி அது கற்பில் முடிய வேண்டும் என்று உரைக்கிறது என்பதால், அக்கருத்துப் புறம்தள்ளப்படுகிற வகையில் உள்ளது எனலாம்.

களவிற்குரிய ஒழுக்கம் என்பது இயற்கைப் புணர்ச்சி, களவில் தலைவன் தலைவி செயல்கள், தோழி, செவிலி, முதலியோரின் கூற்று, குறியிடத்தக்கக் கூட்டம் ஆகியவை எல்லாம் களவில் அடங்கும் எனலாம்.

**கற்பின் ஒழுக்க நெறி**

தொல்காப்பியம் கூறிய கைகோளின் மற்றொரு பகுதி கற்பு நெறியாகும். அந்த ஒழுக்கம் சிறப்பாக அமைவதற்கு ஒத்த தலைவனும் தலைவியும் களவு எனும் காதல் வாழ்வினை நிகழ்த்தப்பட்டு, அது பிறர் அறியாதவாறு மறைந்து ஒழுகிய பின்னர், திருமணம் எனும் கரணம் வாழ்க்கையினைச் சான்றோர்கள், பெற்றோர்கள், உற்றார், உறவினர் ஆகியோரின் முன்னிலையில் எல்லோருக்கும் தெரியும்படி ஊரறிய இல்வாழ்க்கையினை வாழ்வதே கற்பொழுக்க நெறியாகும்.

கற்பு வாழ்க்கை என்பது களவு ஒழுக்கத்தின் கனியே. தலைவியை மனைக்குரியவளாக்கி, மனையோள் என்று அழைக்கப்படும். அத்தகைய மனையோளை மனைவி, மனைக் கிழத்தி என்றெல்லாம் கூறி நல்ல பண்புகளை அவளுக்குரியவனாக்கி உயர்ந்த நிலையில் உயர்வாக்கம் செய்துள்ளார் தொல்காப்பியர். மனைவி நிலையில் இருக்கும் எந்தப் பெண்ணும் இத்தகைய பெயர்களில்தான் அழைக்கப்படுவர். ஆனால், தொல்காப்பியர் சிறந்த அடைமொழிகளைக் கொடுத்து மிகச் சிறந்தவர்களாகக் காட்டியுள்ளார். இத்தன்மை அவருடைய காலத்தில் இல்லத்தரசிக்கு வழங்கப்பட்ட பெயர்களாகும் என்பதைவிட அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் இருந்ததை தொல்காப்பியத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. இதனை,

> **"கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
> கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
> கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள்
> வதுவே."[9]**

என வரும் நூற்பா கூறுகிறது.

கற்பென்று சிறப்பித்துக் கூறப்படுவது, கரணமொடு புணர, அதாவது, மனைவினையொடு பொருந்த கொள்ளுதற்குரிய முறைமையினை யுடைய தலைவன், தலைவியைக் கொடுத்தற் குரிய முறையினையுடைய பெற்றோர், முதலியோர் கொடுக்க முற்படுவதாகும்.

மணமகளை மணையில் இருத்தி, மக்களைப் பெற்ற நான்கு மகளிர் மணமகளைச் சுற்றி நின்று மூதாட்டியர் தாழியில் உள்ள நீரைக் கொண்டு தரத்தர வாங்கி, ஏ நங்காய் கற்பினுன்றும் வழுவாது, இல்லற நிகழ்ச்சிக்கு வேண்டுவன உதவி நின் கணவனைப் பேணும் துணைவி ஆவாயாக என வாழ்த்தி நீராட்டுவர். இதனை வதுவை மணம் என்ற கூறுவர்.

அதற்குப் பிறகு வாகை இலையும் அறுகம் புல்லும் சேர்த்து வெண்மை நூலினால் கையில் காப்புக் கட்டி மனையில் இருத்துவர். பெண்ணின் பெற்றோர் வந்து குழந்தாய் உன் விருப்பம் போல, நீ விரும்பின தலைவனுக்கு கொடுக்கிறோம். நீங்கள் இருவரும் எப்போதும் இணைப் பிரியாமல் இன்புற்று நீடோடி வாழ்க என வாழ்த்திக் கொடுப்பர். யாவரும் வாழ்த்துவர். இதுவே, கடைச்சங்க கால மணமுறை என்று தொல்காப்பியமும் சங்க இலக்கியமாகிய அகநானூறும் கூறுகிறது.

### சங்ககால மணமுறைகள்

சங்க காலத்தில் களவில் தொடங்கி கற்பொழுக்கத்தில் முடிதல் வேண்டும் என்ற வரையறை இருந்து வந்தன என்று தொல்காப்பியத்தின் வாயிலாகவும் சங்க இலக்கியத்தின் வாயிலாகவும் அறிய முடிகிறது.

1. மணமுறை காதல் மணம் - களவு மணம் எனப்பட்டது. அதைச் சமூக ஒழுக்கமாகக் கொண்டதால், களவொழுக்கம் என்று கூறப்படுகிறது. ஆகையில் ஒத்த வயதினர் ஒருவரை ஒருவர் விரும்பிக் காதலித்து வாழ்க்கைத்துணை பெறும் முறை இருந்து வந்தன. ஆனால், அதற்கு மறுப்புத் தெரித்தவர்களும் இருந்தனர். அவ்வாறு, மறுத்த நிலையில் உடன்போக்கு அல்லது காதலி வீட்டில் அடைக்கப்பெற்று, தவிர்க்க முடியா சூழலில் காதலன் மடலேறி, ஊரார் தலையிட்டு மணம் முடித்தல், காதலைத் தெரிவிக்க முடியா சூழலில் காதலி வாடிய நிலையில் அவளுக்கு வெறியாட்டுநிகழ்த்தப்படும். அதற்குப் பின் தோழி மூலம் வெளிப்பட்டு மணம் முடித்தல் ஆகியவை நிகழ்ந்து வந்தன என்பதைப் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரண மென்ப" என்று தொல்காப்பியம் கூறுகிறது.
2. முல்லை நிலத்தில் ஆயர்கள் ஏறுதழுவி வெற்றிக் கண்டு மணம் முடிக்கும் பழக்கத்தையும் சங்க இலக்கியம் கூறுகிறது.
3. பெற்றோர்கள் மணம் பேசி முடிக்கும் சூழல் இருந்தன.
4. பெண்ணுக்கு பரிசு, நகை, பொருட்கள், பணம் ஆகியவை கொடுத்து மணம் முடிக்கும் வழக்கம் இருந்து வந்தன.
5. ஒருமனைவி இருக்கும்போது, அவளுக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்ற காரணத்தால் மறுமணம் விலை கொடுத்து முடிக்கும் வழக்கமும் மனிதர்களிடத்தில் இருந்தன.
6. மன்னர்கள் போரில் வெற்றி பெற்று மணமகளை மணம் முடிக்கும் முறையும் இருந்தன.
7. மாமனார் குடும்பத்தில் முறைப் பெண்ணாக மணம் முடிக்கும் முறையும் இருந்தது.
8. குறிஞ்சியில் அழகிய பெண்ணைக் கடத்திச் சென்று மணம் முடிப்பது அறம் எனப் போற்றப்பட்டது. "மையில் மதியின் விளங்கு முகத்தாரை வெளவிக் கொளதலும் அறன்" (குறிஞ்சிக்கலி - பா.26) என்று கலித்தொகை கூறுகிறது.

"கற்பு என்பது பெண்களுக்குரிய தனிமைப் பண்பு என்று இன்று கருதப்படுகின்றது. தான் மணந்து கொண்ட ஆடவன் ஒருவனையன்றி வேறு ஒருவனை உள்ளத்தாலும் விரும்பாத இயல்புதான் கற்பாகும் என்பர். எங்கோ பிறந்த ஆடவனும் எங்கோ பிறந்த பெண்ணும் கணவனும் மனைவியுமாக வாழ்வதற்கு உள்ளம் ஒன்றிக் கற்பித்துக் கொள்ளுதலினால் கற்பு எனப்பட்டது. இவ்வாறு, கற்பித்துக் கொண்டு ஒழுகின்றவர்கள் வேறொருவரைக் காதலிக்கத் தொடங்கினால், இக்கற்பு நிலைக்கு ஒழுக்க மின்மை என்று கருதினர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த கொள்கை வழி வாழும் இக்கருத்தில் இக்கற்பு கணவன் மனைவி இரு சாரார்க்கும் இருக்க வேண்டிய இயல்பு பண்பாகும்"[10] என்று சி.இலக்குவனரால் கற்பு ஒழுக்கத்திற்குக் கூறப்பட்ட வரையறையாகும்.

"கற்பு - களவொழுக்கத்தின் கனி. அதாவது, அன்பின் வெற்றி. தலைவனும் தலைவியும்

எதிர்ப்பட்டுக் கொண்ட காதலன்பு கெடாமல் இருவரும் மணந்து கொண்டு இல்லறம் நடத்துதலும் தலைவன் பிரியின் தலைவி அன்பு வழுவாமல் ஆற்றியிருந்து வெற்றிப் பெறுதலும் உடைமையின் இது கற்பு எனப்பட்டது."[11] என்று புலவர் குழந்தை குறிப்பிடுகிறார்.

கற்பு ஒழுக்க நெறி என்பது தொல்காப்பியர் காலத்தில் களவில் தொடங்கி கற்பு ஒழுக்கத்தில் முடித்தல் வேண்டும் என்பதே தமிழர்களின் அக வாழ்வின் வரையறை. கற்பு நெறிக்கு விளக்கம் கூறிய சி.இலக்குவனாரும் புலவர் குழந்தை கூறிய கருத்துகள் தொல்காப்பியம் வழி பார்பட்டன என்பது தெளிவு. எனவே, சிலப்பதிகாரத்தில் கூறப்படும் திருமணமுறைகள் பார்ப்பணர்ன் முன்னிலையில் நடைபெற்றுது என்று இளங்கோவடிகள் கூறிய கருத்தில் இருந்து அறிய முடிகிறது.

தொல்காப்பியம் கூறியது போல, திருக்குறளில் காமத்துப்பாலில் 250 குறளகள் உள்ளன. அவற்றுள், களவு பற்றியும் கற்பு பற்றியும் எடுத்து இயம்பும் நோக்கில் உள்ளது என்று அறிய முடிகிறது.

களவுப் பற்றித் தொல்காப்பியம்,

***"குறிப்பே குறித்தது கொள்ளூ மாயின்***
***ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்."[12]***

என நூற்பா கூறுகிறது.

குறிப்பு நிகழுமாறும் அது கண்களால் வரும் நிகழ்வு ஒன்று, மற்றொன்று கண்கள் அல்லாத வழி என்று கூறுகிறது.

***"நோக்கினால் நோக்கி இறைஞ்சினாள் அஃ்தவள்***
***யாப்பினுள் அட்டிய நீர்."[13]***

என வரும் குறள் எடுத்துரைக்கின்றது.

அவள் என்னை நோக்கினாள்: யான் கண்டதும் நாணத் தலைக் குணிந்தாள். அக்குறிப்பு எங்களின் அன்புப் பயிருக்கு வார்த்த நீராயிற்று.

மேலும்,

***"வந்தவழி எள்ளினும் விட்டுயிர்த் தழுங்கினும்***
***நோந்துதெளி வொழிப்பினும்."[14]***

என்னும் நூற்பா கூறுவதையும் அறிய முடிகிறது.

***"மென்திணை மேய்ந்த தறுகட் பன்றி***
***வன்கல் அடுக்கத்துத் துஞ்ச நாடன்***
***எந்தை யறிதல் அஞ்சிக்கொல்***
***அதுவே மன்ற வாரா மையே"[15]***

என வரும் பாடல் புலப்படுத்துகிறது.

இரவுக்குறி பெற்ற தலைவன் தனது தலைமைப்பாட்டினாலே காலந்தவற வந்து தலைவியைக்காணப் பெறானாய் மீண்டனாக: மறுநாள் இரவு தலைவன் சிரைப் புறத்தானாய் நிற்றல் கண்ட தோழி, அவன் முன்னாள் அல்ல குறிப்பட்டுப் போயினான் என்பதை அறிந்து வைத்தும் அவன் முதனாள் வாராதான் போன்று அதற்குக் காரணம் படைத்துக் கொண்டு அவன் கேட்குட்கும்படி தலைவிக்கு கூறுவதாகக் கூறியது.

மேலும்,

***"கண்ணுள்ளார் காதல் அவராகக் கண்ணும்***
***எழுதேம் கரப்பாக்கு அறிந்து"[16]***

எனக் குறள் கூறுவதை அறியலாம்.

எம் காதலர் கண்ணினுள் இருக்கின்றார். அவர் மறைவாரோ என்று நினைத்து எம் கண்களுக்கு மையும் எழுத மாட்டோம் என்று கூறுகிறது.

தொல்காப்பியமும் திருக்குறளும் களவின் ஒழுக்க நெறியில் இருந்து ஓர் ஆணும் பெண்ணும் வழுவாமல் குற்றம் நீங்கிய வழியில்நடத்தல் வேண்டும்என்றுகூறுவதை அறிய முடிகின்றது. தொல்காப்பியம் கைகோளுக்கான இலக்கணத்தைக் கூறுகிறது. திருக்குறள் அவற்றுக்குச் சான்றாக அமைகிறது எனலாம்.

**கற்பொழுக்கத்தைப் பற்றித் தொல்காப்பியம்**

தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையினை நிகழ்த்துக்கின்ற போது, அவற்றுள், பொய்யும் புரட்டும் நிகழ்ந்த போது, கற்பு என்ற ஒழுக்கத்தைக் குற்றம் நீங்கிய வழியைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும் என்பதற்காக,

***"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்***

**ஐயர் யாத்தனர் கரண மென்ப.”**[17]

என வரும் நூற்பா வழி அறியலாம்.

பண்டைய காலத்தில் ஒத்த பருவம், உருவம் முதலியன உள்ள ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு களவொழுக்கம எய்திக் காதல் முதிர்ந்த பின் பலரறிய வெளிப்படையாக வாழ்க்கை நடத்தி வருகையில், ஒரு சிலர், களவொழுக்கத்தை ஒழுகிக் களவு வெளிப்பட்டப் பின் பலர் அறிந்த பின் எக்காரணத்தாலோ நான் இவளைக் காதலிக்கவில்லை எனப் பொய் பேசியும் ஒரு சிலர் பலரறிய வாழக்கை நடத்தி வந்த சில நாட்களில், அவளைக் கைவிட்டும் வந்தனர். அதனைக் கண்ட இல்லப் பெரியோர்கள் ஒரு சிலரால் இத்தகைய வழக்கம் மேற்கொள்ளப்படுவதால், இவ்வொழுக்கம் வரும் காலத்தில் வழக்கமாகிவிடும் என்று அஞ்சி, இனிக் களவு ஒழுக்கத்தைக் களவு வெளிப்பட்ட பின் இல்லறம் நடத்தத் தொடங்குவோர், பலர் முன்னிலையில் பெற்றோர் உடன்பட்டுக் கொடுக்கப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர். இதையே ஆசிரியர் கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வது எனும் கற்பியல் நூற்பா கூறப்படுகிறது.

**“நோன்மையும் பெருமையும் மெய்கொள வருளி”**[18]

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**“யாரினுங் காதல மென்றேனா னூட்டினாள்**
**யாரினும் யாரினும் என்று”**[19]

எனக் குறள் கற்பியலைப் பற்றி வலியுறுத்துகிறது.

மற்றவர்களைவிட நாம் மிக்க காதல் கொண்டிருக்கிறோம் என்று சொன்னேன். யார் அந்த மற்றவர் என்று கேட்டு ஊடல் கொண்டாள்.

தமிழர்களின் வாழ்க்கை நெறிகளைப் பற்றிச் சங்க இலக்கியம், காப்பியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம் மற்றும் பிற இலக்கியங்கள் அனைத்துமே வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகளைக் கூறுகின்றது. மனிதர்கள் வாழ்க்கை நெறியில் இருந்து விலகி விடாமல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதே இலக்கியத்தின் முக்கிய நோக்கமாகும். அவற்றுள், இருந்து விலகி விட்டால், அதனால், ஏற்படும் தீங்குகள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் அனைத்து இலக்கியமும் எடுத்து இயம்பும் வகையில் கூறுகின்றன.

இன்றைய காலத்தில் தொல்காப்பியம் கூறிய கைகோளிற்கும் திருக்குறளில் கூறப் பட்ட காமத்துப்பாலின் வழி கூறப்பட்ட களவு, கற்பு ஆகியவற்றில் இருந்து இச்சமூகம் எந்த அளவிற்கு விலகியுள்ளது என்பதை இன்றைய வாழ்க்கை முறையில் இருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. காலம் மாறினாலும் அவரவருக்கு ஓர் ஆளுமை பண்பு அதாவது, நடத்தைகள் ஒன்று இருக்கும் அதில் இருந்து எந்தச் சூழலிலும் பிறழாமல் காலத்திற்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும்.

தமிழரின் அக வாழ்வில் இன்றைய தலைமுறையினர் தொல்காப்பியமும் திருக்குறளும் கூறிய கருத்துகளில் இருந்து மாறுபட்ட கருத்துக் கொண்ட களவும் கற்பும் வாழ்க்கையினை நடத்தி வருதைக் காண முடிகின்றது. தமிழர்களின் கைகோள் எனும் அக வாழ்க்கை ஒழுக்கத்தை கடைப்பிடித்து வந்தால், இந்த உலகில் யாரும் யாரையும் யாமாற்றுவதற்கு இடம் தருவதற்கு ஏதுவாக அமையும். எனவே, தமிழர் மக்களின் வாழ்வின் ஒழுக்க நெறியில் இருந்து விலகி நிற்காமல் இருப்பதற்குத் தமிழர்களுக்குத் தொல்காப்பியமும் திருக்குறளும் தேவைப்படுகின்றது என்றால், அது மிகையகாது. இவ்விரண்டும் தமிழர்களின் இரண்டும் கண்கள் எனலாம்.

தமிழர்கள் அக வாழ்க்கையில் இருந்து வழுவாமல் வாழ வேண்டும். அதே போல, புற வாழ்வில் இருந்தும் நெறி வழுவாமல் வாழ்தல் என்பது தமிழர்களின் தலையாய

பண்பு என்பதைச் சங்க இலக்கியத்தின் வழியாகவும் திருக்குளின் வழியாகவும் மற்ற இலக்கியத்தின் வழியாகவும் அறிய முடிகின்றது.

### சங்க மருவிய காலத்தில் மணமுறை

சங்க காலத்தில் ஒழுகப்பட்ட மணமுறைகள் தொல்காப்பிம் மற்றும் சங்க இலக்கியத்தின் வழியாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. இன்றைய திருமணமுறை சங்க காலத்தில் நடைபெறவில்லை. இந்த வழக்கம் பின்னால் வந்த ஆரியராகிய பிராமணரால் உருவாக்கப் பட்டது என்று சங்க இலக்கியத்தின் வழியாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

தை முதல் ஆவணி வரை நிலவு ஒளியில் உள்ள இரவுக் காலத்தை மணவினை நடத்தினர். இதனை

**"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டித்**
**தீவலஞ் செய்வது காண்பார்கண் நோன்பென்னை."[20]**

என்ற சடங்குகள் ஏற்படுத்தப்பட்டன என்று கூறுவதைக் காணலாம்.

சிலப்பதிகாரத்தில் கோவலன் பெற்றோரும் கண்ணகி பெற்றோரும் பெருமைக்குரிய ஒரு நாளில் கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் செய்து வைக்க விரும்பினர். யானையின் மேல் கண்ணகியை மகளிருடன் ஊரறிய அழைத்து வந்து திருமணம் செய்தனர்.

அப்போது முடுகு, சங்கு ஆகியன முழங்க வெண்கொற்றக் குடையுடன் அரசன் வருவது போல, தெருவில் மங்கல அணிவகுப்பு வந்தது. மணமேடை வையிர மணித்தூணின் உச்சியில் மாலைகள் தொங்கவிடப்பட்டு இருந்தன. முத்துப் பந்தலின் கீழ் திருமணம் நடைபெற்றது. நிறைமதியும் உரோகினி மீனும் வானத்தில் கூடி வரும் நாளில் பெரிதும் முதிர்ந்த பார்ப்பான் மறை ஓதி வழிகாட்டி சாலி என்றும் அருந்ததி என்றும் கூறப்படும் வடமீனாகிய துருவமீன் போன்ற கற்புடைய கண்ணகியைக் கைப்பற்றிக் கொண்டு கோவலன் திருமணம் வேள்வித் தீயைச் சுற்றி வலம் வந்தான். இந்தக் காட்சியைக் கண்டவர்கள் எத்தகைய தவம் செய்தார்களோ அறியேன் என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

மேலும் மணம் தெளிப்போர், மங்கலம் பாடுவோர், ஓரக்கண்ணால் பார்ப்போர், சந்தனம் புசுவோர், நறுமணம் புகைப்போர், மாலை சூடிய மகளிர், ஏந்துமுலை கொண்ட இளமகளிர், மணப்பொடி வீசுவோர், விளக்குடன் செல்வோர், அணிகலன் சுமப்போர், கூந்தலில் பு முடித்த பொற்கடி ஆகியோர் பலரும் ஒன்றுகூடி அழைத்துச் சென்று முதலிரவு திருமணமெத்தை மேல் ஏற்றினர். "காதலர் பிரியாமல் கவ்வி அனைத்த கை நெகிழாமல் தீதின்றி வாழ்வீர்களாகுக" என்று வாழ்த்தி மெத்தையில் எற்றினர் அக்கால மக்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

தொல்காப்பியர் காலத்தில் அந்தணர் என்று கூறப்படும் பார்ப்பணரைக் கொண்டு திருமணம் நடைபெறவில்லை. அவருடைய காலத்தல் அகநானூறு குறிப்பிடும் திருமணமுறை வழக்கில் இருந்தது என்று தொல்காப்பியம் வழி அறிய முடிகிறது. சிலப்பதிகாரம் சங்க மருவிய காலத்து இலக்கியம் என்பதனால், அவை கூறும் திருமண மரபு என்பது இன்றைய காலத்தில் நிகழும் திருமண மரபாகும். சுங்க காலத்தில் அந்தணர், மறையோர் என்பதற்குச் சான்றோர், பெரியோர் என்று சொல்லப்படும் வழக்கம், சிலப்பதிகாரம் தோன்றி பின்னர், அச்செ ால்லுக்குப் பார்ப்பணர் என்று மாறியதை அவற்றின் வழியாக அறிய முடிகின்றது.

### இறுவாய்

தமிழர்களின் அக வாழ்வில் நடைபெறும் வாழ்க்கை நெறியினைப் பற்றிக் கைகோள் என்று சொல்லப்படும் களவு, (காதல்) கற்பு (இல்வாழ்க்கை) நெறியில் இருந்து வழுவாமல் இருக்கவும் நம் முன்னோர்கள் காதல் வாழ்வினை எவ்வகையில் மேற்கொண்டனர் என்று இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த

தொல்காப்பியமும் அந்த இலக்கணத்தின் வழியில் இருந்து விலகாமல், வாழ்க்கைக்குத் தேவையான இலக்கணத்தை மொழிந்த தொல்காப்பியமும் அவற்றுக்குச் சான்றாக அமைந்ததிருக்குறளும் மனித வாழ்க்கையினைச் செம்மைப்படுத்தும் நோக்கில் உள்ளது. இவைகள் நம் முன்னோர்கள் மேற்கொண்ட வாழ்க்கையினை இலக்கணமாகக் கூறுகின்றது.

இன்றைய காலத்தில் தொல்காப்பியம் மற்றும் திருக்குறள் கூறிய கத்துக்குப் புறம்பாக நடந்து கொண்டு இருக்கும் இந்த வாழ்க்கை முறைகள், தமிழர்களின் இனி வரும் அடுத்த தலைமுறையினாின் வாழ்க்கைக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் என்பது திண்ணம். தமிழர்களின் பண்பாடு, நாகாீகம், கலாச்சாரம் ஆகியவை இந்த உலகத்தில் நிலைத்து வாழ வேண்டும். இது காலங்காலமாக நிலைத்து நிற்க வேண்டும் என்றால், நம்முடைய இலக்கியங்கள் கூறிய கருத்துகளில் இருந்து எந்தச் சூழலிலும் வழுவாமல் வாழ்தல் வேண்டும். இதனால், தமிழர்களின் பண்பாடு, நாகரீகம், அகம் மற்றும் புற வாழ்க்கை முறைகள் நல்வழியில் ஒழுகினால் மட்டுமே தமிழ் இலக்கியமும் தமிழர்களின் வாழ்வும் மேன்மை அடைந்து பாதுக்காக்கப்படும். அவற்றின் சிறப்பு பேசப்படும் என்பதில் சிறிதும்கூட ஐயமில்லை.

**அகத்தின் கைகோள் மாந்தருக்கு இரு கண்கள்**

## அடிக்குறிப்புகள்

1. இறை. களவி. நூ.56.
2. தொல். பொருள். செய்யுள். நூற்.1444.
3. களவி. நூற்.1039.
4. இறை. களவி. உரை. நூற்.11.
5. தொல். பொருள். கள. நூற்.1076.
6. மேலது, செய்யு. நூற்.1457.
7. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல். பக் - 142.
8. கு. சுந்தரமூர்த்தி, தொல். பொருள். தொகுதி - 1, பக் 14-15.
9. தொல். பொருள். கற். நூற் - 1088.
10. சி. இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, (பக்.173).
11. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், பக்.155.
12. தொல். கள. நூ. 310.
13. திருக். காம. 1093.
14. தொல். பொருள். கள. நூற். 109.
15. ஐங்குறு. பா. 261.
16. குறள் - 1127.
17. தொல். பொருள். கற். நூற். 143.
18. மேலது, நூ.144.
19. குறள் - 1314.
20. சிலப்பதிகாரம், புகார். மங்கல. அடி. (1:52 - 53).

## துணைநூற்பட்டியல்

1. தொல்காப்பியம், இளம்புரணர் உரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1. முதற்பதிப்பு சூன் - 1953.
2. தொல்காப்பியம், இளம்புரணர் உரை, சாரதா பதிப்பம், சென்னை.
3. சி. இலக்குவனார். தொல்காப்பிய ஆராய்ச்சி வள்ளுவர் கோட்டம், வடக்கு மெயின் ரோடு, புதுக்கோட்டை, முதற்பதிப்பு - 1961.
4. உ.வே.சாமிநாதன். (உரையாசிரியர் மற்றும் பதிப்பு) சிலப்பதிகாரம், உ.வே.சா. நூல் நிலையம், திருவாண்மையுர் பெசன் நகர் அஞ்சல், சென்னை - 90. முதற்பதிப்பு 1892.
5. கு.சுந்தரமூர்த்தி தொல்காப்பியம் (பொருளதிகாரம்) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், சிதம்பரம் - 608002. முதற்பதிப்பு - 1985.
6. பரிமேலழகர் திருக்குறள் உரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 154. முதற்பதிப்பு - 1998.

7. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், மெய்யப்பன் பதிப்பகம், 53,புதுத்தெரு, சிதம்பரம் - 608001, முதற்பதிப்பு - 2009.

8. இராசாராம் துரை, இறையனார் அகப்பொருள், முல்லை நிலையம், த.பாரதி நகர். முதல் தெரு, தி.நகர், சென்னை - 17. முதற்பதிப்பு - 1997.

9. போ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்) ஐங்குறுநூறு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், 522. டி.டி.கே.சாலை, ஆழ்வார்பேட்டை. சென்னை - 18. முதற்பதிப்பு - 1961.

10. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், எம்.கலைவாணன் மனை எண் - 9, கதவு எண் 36. முதல் தமிழ் சென்னை - 88. முதற்பதிப்பு - 2006.